**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**

**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**<u>ஆணை நாள்: 04.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**<u>வழக்கு எண்.SA4560/F/2020</u>**

**திரு R.நவநீதன் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**பரமத்தி வேலூர் வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **05.03.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **15.04.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **08.06.2020** |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு R.நவநீதன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 05.03.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், குப்பிரிக்கபாளையம் கிராம நிர்வாக அலுவலர்

திருமதி V.தீபா அவர்களுக்கு கடந்த 03.03.2020-ம் தேதி அன்று பதிவு தபால் மூலம் இந்திய சாட்சி சட்டம் 74 மற்றும் 76-ன் கீழ் ஆவணங்கள் கொடுக்குமாறு RT465503008IN என்ற பதிவு அஞ்சல் மூலம் மனு அளிக்கப்பட்டதாகவும் மேற்படி மனு குறித்தும் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபர அறிக்கை அனைத்தும் சான்றிட்ட நகல், ஜேடர்பாளையம் வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு கடந்த 03.03.2020-ம் தேதி அன்று பதிவு தபால் மூலம் RT465503011IN என்ற பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்ததாகவும் மேற்படி மனுவிற்கு ஜேடர்பாளையம் வருவாய் அலுவலர் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபர அறிக்கை விபரம், 03.03.2020-ந் தேதி அன்று பரமத்தி வேலூர் வட்டாட்சியருககு பதிவு தபால் மூலம் (RT465503025IN) புகார் மனு ஒன்றை அனுப்பி வைத்ததாகவும் மேற்படி புகார் மனுவிற்கு வட்டாட்சியர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட அனைத்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அனைத்து வருவாய் ஆய்வாளருக்கு கொடுக்கப்பட்ட குறிப்பானை அல்லது நடவடிக்கை குறித்து சுற்றறிக்கையின் நகல் அனைத்தும் சான்றிட்ட நகல் ஆகிய தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 15.04.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 08.06.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 05.03.2020 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வாரத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 05.03.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA4560/F/2020**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**பரமத்தி வேலூர் வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம்.**

**மனுதாரர்**

**திரு R.நவநீதன்,**
**த/பெ. ராஜகோபால்,**
**எண்.2/120A, அண்ணா நகர்,**
**மொளசி (ம) அஞ்சல்,**
**திருச்செங்கோடு வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம் - 637 210.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020